REGD. NO: M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 15உ வியாழன் (31—10—57) ★ ☆ வெளியூர்: ஐப்பசி 16உ வெள்ளி (1—11—57) [இதழ் 119

ஓடிவர அழைப்புத் தரமாட்டார்களாம்!

டார்ஜிலிங், அக். 30—

இரண்டாம் திட்ட காலத்திற்குப் பிறகு அகதிகள் பிரச்சினை இருக்காது என்பதாகவும், அப்போது அகதிகள் இலாகாவே முடப்பட்டுவிடும் என்றும் அகதி இலாகா மந்திரி மேகர் சந்த் கன்னு, தெரிவித்திருக்கிறார்.

மேற்குப் பகுதியைப் பொறுத்து அகதி புனரமைப்பு அமைச்சரவையின் வேலை முடிந்துவிட்டது என்றும், எஞ்சியுள்ள வேலைகள் இரண்டாம் திட்ட இறுதிக்குள் முடிந்துவிடவேண்டும் என்றும், அந்த இலாகாவின் முடிவுக்கு தேதி நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது. சீக்கிரமே அகதி முகாம்களை ஒழித்துவிடவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

'அரசியல் இலாபம் கருதி தவருன பாதையில் தி. மு. க. சென்று விடாது'

'தாழ்த்தப்பட்ட மக்களை நாங்கள் காட்டிக்கொடுத்ததாகக் கருதுவது தவருனது'

'எங்கள் கண்ணேட்டமும் அணுகும் முறையும் வெவ்வேருனவை'

'ஆட்சியாளருக்கு ஏற்ற பாடத்தைக் கற்பிக்கவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறேம்'

சென்னை சட்டமன்றத்தில் அண்ணு தெளிவுரை

சென்னை, அக். 31—

"இந்தக் கலவரமான நிகழ்ச்சியில் யாரை ஆதரித்தால் நமக்கு நல்லது—யார் பக்கம் சேர்ந்தால் அரசியல் இலாபம் கிட்டும் என்றெல்லாம் கணக்கிட்டுக்கொண்டு யார் பக்கமும் அவசர அவசரமாகச் சேர்ந்துவிடும் தவருன பாதையை திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடிக்கவில்லை. அதனுல், 'கழகத்தினர் தேவர்களை ஆதரிக்கிருர்கள்; தாழ்த்தப்பட்ட மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள் என்று சிலர் கருதிக்கொண்டால் அது எங்களுடைய தவறு அல்ல; நாங்கள் பிரச்சினையைப் பார்க்கின்ற கண்ணேட்டம் வேறு—அணுகுகின்ற முறையும் மாறுபட்டது!

"அரசியல் இலாபங்களை நாங்கள் கருதவில்லை; அங்கே இருக்கின்ற பயங்கரமான சூழ்நிலையை மறையச் செய்வது எப்படி—அவர்கள் சுமுகமாக வாழ்வதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் நாங்கள் சிந்திக்கிறேமே தவிர, வேறல்ல!

"இந்தப் பிரச்சினையை நாங்கள் இந்த முறையிலே அணுகுவதற்குக் காரணம், நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களில் இன்று மட்டுமல்ல—என்றுமே அக்கறை கொண்டவர்கள். அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டின் வருங்காலம்—சிறப்பாக அந்தப் பகுதி மக்களின் எதிர்காலம் நட்புறவுடன் அமையவேண்டும் என்று கருதுபவர்கள் நாங்கள்"

—இவ்வாறு அண்ணு அவர்கள், நேற்றைய சட்டசபைக் கூட்டத்தில் 'அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை' என்னும் தீர்மானத்தின்மீது பேசுகையில் முதுகுளத்தூர் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்துவிட்டு மேலும் பேசியதாவது:—

"தேவர்களிடையே கள்ளர், மறவர், அகமுடையர் என்று மூன்று பிரிவுகள் இருப்பதைப் போல் எதிர்த் தரப்பில் நாங்கள் ஐந்து பிரிவினர் இருக்கிறேம். நாங்களெல்லோரும் தனித் தனியான கொள்கைகளைக் கொண்டவர்கள்; எனவே, ஒவ்வொருவரும் அவரது கோட்பாட்டுக்கு ஏற்றவாறு பிரச்சினையை அணுகுகின்றேம். இதனுல், பிரச்சினையை அணுகும்முறையில் வேறுபாடுகள் இருக்கலாம்; அதைக் காட்டி, 'ஆகா, இவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றனவே' என்று நின்டல் செய்வதிலே அர்த்தமில்லை. நாங்கள் எதிர்க்கட்சிகள்—எதிர்க் கட்சியல்ல!

"இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியும், அதற்குத் தெற்கேயுள்ள பகுதிகளைப் பற்றியும், இதற்கு முன்னுல் பேசும்போது வருத்தமாகச் சொல்லிக் கொள்வேன் — இப்போது அதையே பெருமையோடும் பூரிப்போடும் சொல்லிக்கொள்ளுகின்றேன்—பரமக்குடிக்குத் தெற்கே நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் பரவவில்லை; எனது 25 ஆண்டு அரசியல் வாழ்க்கையிலே ஒருதடவைகூட அந்தப் பகுதியிலே நான் போய்ப் பேசியதில்லை; அதனுலேதான் நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளுகின்றேன் — 'திராவிட முன்னேற்றக் கழகம் பரவாத பகுதிகளிலேதான் இத்தகைய கவலைக்கிடமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன'—என்று.

"எங்கள் கழகம் அங்கே பரவியிருந்தால் என்னென்ன கேடுகள் விளைந்திருக்கக்கூடும் என்று என்னுல் புரிந்துகொள்ள முடிகிறது. 'அந்தக் குற்றத்தில் இவர்களுக்கும் பங்குண்டு—அங்கே நடந்த கொலைக்கு இவர்கள் உடந்தை'—என்று எங்கள் கழகத்தவர் எத்தனையோபேர் குறறம் சாட்டப்பட்டிருக்கலாம்.

"முதுகுளத்தூரிலே நடந்ததென்ன—நவகாளியா, ஜாலியன் வாலாவா என்று கேட்டால், இரண்டும்தான்; அதைப் பற்றி நான் சொல்ல விரும்புவதெல்லாம், ஆண்டவனைப் பற்றிச் சொல்லப்படுவதைப் போல், 'கண்டவர்; விண்டிலர்; விண்டவர் கண்டிலர்?' என்பதுதான்!

"அங்கே படுகொலைகளும் நடந்திருக்கின்றன; ஜாலியன்வாலாவைப்போன்ற துப்பாக்கிப் பிரயோகமும் நடந்திருக்கிறது. தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

"முத்துராமலிங்கத் தேவரைக் கைது செய்யப் பயன்படுத்தப்பட்ட தடுப்புக் காவல் சட்டத்தை நாங்கள் கண்டிக்கும்போது, தேவருக்கும் எங்களுக்கும் தொடர்போ பற்றோ, பந்தமோ, பாசமோ எதுவும் இருந்ததில்லை — இப்போதுமில்லை என்பதை நீங்கள் மனதிலே கொள்ள வேண்டும். அவர், காங்கிரசோடு வேண்டுமானுலும் சேருவாரே தவிர, எங்களோடு தப்பித் தவறிகூட நெருங்கமாட்டார்!

"நாங்கள் கண்டிப்பதெல்லாம், இந்த அரசாங்கம தடுப்புக் காவல் சட்டத்தை அளவுக்கு மீறிப் பயன்படுத்துகிறது என்பதற்காகத்தான். சில ஆண்டுகளுக்கு முன்னுல் நண்பர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் ஒரு கொள்ளைக் குற்றம் சாட்டப்பட்டார். அவரைப் போன்று சாதுவாக இருப்பவர்களை கொள்ளைக் குற்றம் சாட்டப்பட்டார்கள் எனருல், எங்களிலே எத்தனைப்பேர் கொலைக்குற்றம் சாட்டப்படக் கூடுமோ என்று, எங்களால் எண்ணுமலிருக்க முடியவில்லை.

"தடுப்புக்காவல் சட்டத்தைக் கண்டிப்பதாலேயோ, அந்தச் சட்டம் தேவரைக் கைது செய்யப் பயன்படுத்தப்பட்டது தவறுஎன்று சொல்வதாலேயோ நாங்கள் தேவரை ஆதரிக்கின்றேம்—தாழ்த்தப்பட்ட மக்களை மறந்துவிட்டோம் என்று அர்த்தமல்ல!

"இன்னும் சொல்லப்போனுல், தாழ்த்தப்பட்ட மக்களைக் காப்பதற்காக இந்த அரசாங்கம் ஓரளவு அடக்குமுறையைப் பயன்படுத்த நேரிட்டிருந்தாலும் அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறேம்; காரணம், இவ்வளவு நாட்களாக அவர்கள் அந்த அளவு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வந்திருக்கிருர்கள்!

"ஆனுல், போலீஸ் அமைச்சர் பக்தவத்சலத்தினுடைய அறிக்கையின்படி பார்த்தால், அங்கே கலவரமான சூழ்நிலை நீண்டகாலமாக இருந்துவந்திருக்கிறது என்பது புரிகிறது. 1932-ம் ஆண்டிலிருந்தே அந்த நிலை இருந்திருக்கிறது என்கிருர். அப்படியானுல் 'Sudden outbreak' என்ற வார்த்தைகள் எப்படிப் பொருந்தும்? 'Sudden outbreak' என்ருல், திடீர் என்று எதிர்பாராமல் ஏற்பட்ட கலவரங்கள் என்று அர்த்தம்; ஆனுல் எதிர்பாராமல் திடீரென்று இந்தக் கலவரங்கள் ஏற்பட்டன என்று எப்படி நாங்கள் ஒப்புக்கொள்வது?

"கலவரமான சூழ்நிலை அங்கே நீண்டநாளாக நிலவிவந்தும், இந்த அரசாங்கம் ஏன் அப்போதே நடவடிக்கை எடுக்கவில்லை? இந்த அரசாங்கம் எந்தப் பிரச்சினையையும்—முதுகுளத்தூரானுலும் சரி, முரளீஸ் கபே விஷயமானுலும் சரி—முளையிலேயே தீர்ப்பதில்லை! முண்டபிறகுதான் அதனை அணுகுகிறது! அதனுலே, இந்த அரசாங்கத்திற்குத் திறமையில்லை என்று குற்றம் சாட்டுகிறேன்—அதன் அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் ஆதரிக்கிறேன்.

"முரளீஸ் கபே விஷயத்தைப் பற்றிப் பேசும்போது நான் மற்றென்றையும் இங்கே குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகின்றேன். பெரியார் நடத்துகின்ற இந்தப் போராட்டத்தில், ஏறக்குறைய 800 பேர் சிறைக்குச் சென்றும் ஏன் அரசாங்கத்தின் கவனம் அந்தப் பிரச்சினையிலே இன்னும் பாயவில்லை? கேரள அரசாங்கம், சாதிப் பெயர் போட்ட பலகைகளை அழித்துவிடக் கோரி அறிக்கை விடுத்திருக்கிற முறையை நீங்களும் ஏன் கைபாளக்கூடாது?

"கலவர நிலையை உடனடியாக அரசாங்கம் மாற்ற முயலாததிலிருந்து, வேண்டுமென்றே நிலைமையை வளரவிட்டுவிட்டு அதன்மூலம் இலாபம் சம்பாதித்துக்கொண்டது என்று நான் குற்றம் சாட்டுகிறேன்—அதனாலே இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

"இதை நாங்கள் சொல்லும்போது, 'நாங்கள் 150 பேர் இருக்கிறேம்; அதனுல் எங்கள் பக்கம்தான் நியாயமிருக்கிறது' என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஒரு கொள்கையில் இருக்கிற நியாய அநியாயம் அதைச் சார்ந்தவர்களது எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; அவர்களது எண்ணத்தைப் பொறுத்தது.

"நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதால், ஏதோ மாபெரும் ஆபத்து உங்களுக்கு வந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டு நீங்கள் பேசத் தேவையில்லை; எங்கள் தீர்மானம் வெற்றிபெருது என்று எங்களுக்கு நன்ருகத் தெரியும்; உங்களுக்குப் பாடம் புகட்டவேண்டுமானுல் அது காலத்தால்தான் முடியும்.

"எனக்கிருக்கிற வருத்தமும் வியப்பும், திரு. சசிவர்ணத் தேவர் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில், அங்கிருக்கிற தேவர்களுக்கும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையே நட்புறவு ஏற்படுத்த நீங்கள் ஏன் முயலவில்லை என்பதுதான். காமராசரும், முத்துராமலிங்கத் தேவரும் ஒன்ருகப் பேசி அமைதியான சூழ்நிலையை அங்கே ஏன் வளர்க்கக் கூடாது? போலீசை என்றுமே அங்கு வைத்திருந்து நிலைமையைச் சமாளிக்க முடியாது.

"திரு. தேவர், காமராசர்மீது கள்ளநோட்டுஅச்சடித்தார்என்று குற்றம் சாட்டினுர் என்று இந்த மன்றத்தில் பேசப்பட்டது. அவர் காமராசரை மட்டுமா குற்றம் சாட்டினுர்? 'அந்தக் கள்ளநோட்டு அச்சடித்தலில் அண்ணுதுரைக்கும் பங்கு உண்டு' என்றும் சொல்லி வந்திருக்கிருர்.

"அப்படிப் பேசியபோதெல்லாம் நடவடிக்கை எடுக்காமல், இப்போது நடவடிக்கை எடுப்பதிலே என்ன இலாபம்? எந்தப் பிரச்சினையையும் முளையிலேயே அணுகுவதால்தான் அதைத் தீர்க்க முடியுமென்ற அரசியல் தத்துவத்தை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இமானுவல் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி இங்கே பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரை சொல்லுவேன்—அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்திருக்கிருர்; அவருடைய பெயர் எதிர்கால வரலாற்றில் பொறிக்கப்பட இருக்கிறது. அவர் கொலை செய்யப்பட்டது, அவரைத் தலைவராகக் கொண்ட அனைவருக்கும் ஆத்திரம் ஊட்டுவது இயல்பு; அந்த ஆத்திரத்தில் பழிக்குப்பழி வாங்க முயல்வதும் இயல்பு,

(4-ம் பக்கம் பார்க்க)

முதுகுளத்தூர் சம்பவம்

விடுகளிழந்தோருக்கு நிவாரணம்

குடும்பத்துக்குரூ.100கிடைக்கும்

புதுடில்லி, அக். 31—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களினுல், வீடிழந்த ஒவ்வொரு ஆதித் திராவிடக் குடும்பத்துக்கும் மறவர் குடும்பத்துக்கும் ரூ. 100 மானியம் வழங்கப்படும்.

இத்தொகையில் பாதியை மாநில சர்க்காரும் மற்றெரு பாதியை மத்தியசர்க்காரும் வழங்குவர். மொத்தம் 2879 வீடுகள் நாசம் செய்யப்பட்டன. எனவே, மத்திய சர்க்கார் கொடுக்கும் பங்குத் தொகை ரூ. 1·43 இலட்சம்.

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—10—57 வியாழன்

முயற்சியும் - விளைவும்

"முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டினேன்—அதில் இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணியே இல்லை!"

"தண்ணியில்லா குளத்திற்கு மூன்று பேர் காவல்—அதில் இரண்டு பேர் முடம்; ஒருவனுக்குக் காலே இல்லை!"

இப்படி ஒரு வேடிக்கையான தமிழ்ப் பாட்டு உண்டு.

பாட்டு, படிப்பதற்கு வேடிக்கையாக இருப்பதுடன் பொருட்செறிவு உடையதும் ஆகும்.

நிதி அமைச்சர் கிருட்டினமாச்சாரியார் அவர்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாடுகளை நிறைவேற்ற மூலதனம் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றதும், வெறுங்கையுடன் வீடு திரும்பினதும், வாயை இறுக மூடிக்கிடப்பதும் மேற்படி பாட்டின் பொருளையே நமக்கு நினைப்பூட்டுகிறது.

அகமும் முகமும் மலர நிதி அமைச்சர் ஆச்சாரியார், அமெரிக்கா சென்றார்!

கனடாவிற்குக் காவடி தூக்கினார்!

மேற்கு ஜெர்மனியில் முகாமிட்டார்!

நிதி அமைச்சர் சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது—விருந்து உபசாரத்திற்கும் குறைவில்லை.

ஆங்காங்கே அளிக்கப்பட்ட வரவேற்பையும், விருந்து வைபவத்தையும் கண்ணுற்ற நமது நிதி அமைச்சர்—அமெரிக்கா பெரும் நிதி கடன் தரும்; கனடா தேவைக்கு அதிகமாக மூலதனம் கொடுத்துதவும்; மேற்கு ஜெர்மனியும் தன்னால் இயன்றதை கரவாது ஈயும்—என்றுதான் திடமாக நம்பி இருக்க வேண்டும். அத்தகு நம்பிக்கை அவருக்கு இருந்த காரணத்தினால்தான், அமெரிக்காவை உற்சாகப்படுத்தக் கருதி, அதற்கு விருப்பமான செய்திகளைக் கூறினார்.

ஒரே மூச்சில் அமெரிக்காவிற்கு ஆசையுமூட்டினார்—அச்சத்தையும் அளிக்க நிதி அமைச்சர் முயன்றார்.

ஆனால், அந்தோ! அவர் நினைப்பு நாசமாயிற்று!

அவர் ஊட்டிய ஆசைக்கும் அச்சத்திற்கும் அமெரிக்கா செவிசாய்க்கவில்லை. நிதி அமைச்சர் ஆறுதல் பெறும் வகையில் சிறு புன்முறுவலைக் கூட, அவர் உழைப்புக்குப் பரிசாக அளிக்க அமெரிக்கா முன் வரவில்லை.

முகத்திலே அசடு சொட்ட, நெஞ்சிலே துக்கம் தேங்க, உடலிலே நடுக்கம் தோன்ற, நிதி அமைச்சர் பம்பாய் திரும்பினார். அங்கும் எவருடனும் வாய் திறந்து பேசாது, நேரே டில்லிக்குச் சென்றுவிட்டார்!

வெற்றியாக முடியும் என்ற பெரும் நம்பிக்கையுடன் நிதி அமைச்சர் துவக்கிய அமெரிக்க விஜயம், இணையற்ற பெரும் தோல்வியில் முடிந்தது!

'எதையும் எதிர்பார்த்து அமெரிக்கா செல்லவில்லை—எனவே, ஏமாற்றம் ஏற்படவில்லை' என்று நிதி அமைச்சர் தனது தோல்வியை மறைக்க, வீரம் வேறு பேசுகிறார்!

கடன் நாடி அமெரிக்கா செல்லவில்லை என்றால், நிதி அமைச்சர், அமெரிக்காவுக்கு ஏன் இத்தருணத்தில் செல்ல வேண்டும்? அதற்காகஏன்மக்கள் வரிப்பணத்தைச் செலவழிக்க வேண்டும்?—என்ற நியாயமான கேள்விகள் எழத்தான் எழும்.

அமெரிக்கா சென்றதுடன் நிற்காது, கனடாவிற்கு நிதி அமைச்சர் எதுபற்றிப் போனார் என்ற கேள்வியும் கிளம்பும்—அதற்கும் நிதி அமைச்சர் தக்க பதில் கூறியாகவேண்டும்.

அதுபோன்றே, மேற்கு ஜெர்மனியில் நிதி அமைச்சருக்கு என்ன வேலை? உல்லாசப் பிரயாணமா அவர் செய்தார்?—என்ற கேள்விகளுக்கும், பதில் கூறவேண்டிய கடமை அவருடையதாகும்.

அமெரிக்கா, கனடா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு நிதி அமைச்சர் சென்றது கடன் பெறத்தான் என்பது ஒப்பமுடிந்த உண்மை. ஒரு சல்லியும் உதவியோ, கடனோ பெறாத நிதி அமைச்சர், நாடு திரும்பினதும் மறுக்கமுடியாத உண்மை.

'எதையும் எதிர்பார்த்துச் செல்லவில்லை' என, ஏமாற்றம் ஏற்பட்ட பிறகு வீராப்பாகக் கூறிடும் நிதி அமைச்சர், அமெரிக்காவிலிருந்தகாலை, 'இந்தியாவை விற்க வேண்டும்' என்று ஏன் குறிப்பிட்டார் என்பது விளக்கப்பட வேண்டும்.

'இந்தியாவை விற்க வேண்டும்' என நிதி அமைச்சர் கூறினதற்கு என்ன பொருள்?

அமெரிக்கக் கடனைப் பெற வேண்டுமானால், அமெரிக்காவிற்கு 'இந்தியாவை விற்றால் தான் கடன் கிடைக்கும்' என நிதி அமைச்சர் கருத்து கொண்டுள்ளதினால்தான், அவ்வாறு அவர் கூறவேண்டியதாயிற்று என்பதற்கு விளக்கம் வேறு வேண்டுமா?

'இந்தியாவை விற்க வேண்டும்' என்ற நிதி அமைச்சர் சொல்லிலே, எவ்வளவு சலிப்பு? ஏன் இந்தச் சலிப்பு?

எப்பொழுது ஒருவருக்குச் சலிப்பு ஏற்படும்?

முயற்சியின் துவக்கத்தில் எவருக்கும் சலிப்பு ஏற்படமுடியாது. முயன்று முயன்று பார்த்து, தனது அறிவாற்றல் அனைத்தும் அதில் செலவழிந்து போன பிறகல்லவா, ஒருவருக்கு சலிப்பின் அறிகுறி தோன்றும்?

அமெரிக்க உதவியைப் பெற, நிதி அமைச்சர் தனக்குத் தெரிந்த வித்தை அனைத்தையும் நடித்துக்காட்டி இருக்கின்றார்! அவ்வளவுக்குப் பிறகும் அமெரிக்கா அசைந்துகொடுக்கவில்லை! அதன் பிறகே, நிதி அமைச்சருக்கு சலிப்பு ஏற்பட்டிருக்கிறது!

'இந்தியாவை விற்க வேண்டும்' என, மிதமிஞ்சிய சலிப்புடன் நிதி அமைச்சர் உரைத்திருக்கிறார்!

நிதி அமைச்சர் அமெரிக்க உதவி நாடிச் சென்றார்—வெறுங்கையுடன் வீடு திரும்பியுள்ளார் என்ற சேதிதான் மறுக்க முடியாத உண்மையாகும்.

நிதி அமைச்சரின் முயற்சியும், ஏற்பட்ட முடிவும், தலைப்பில் குறிப்பிட்டுள்ள பாட்டின் கருத்தைத்தான் நமக்கு நினைப்பூட்டுகிறது.

இந்தியை எதிர்க்கும் நம் போராட்டம் பலம் வாய்ந்ததாக இருக்கும்

வடவரிடம் 'வாய்தா' கேட்டுப் பழகியவர்கள் நம்மையும் 'வாய்தா' கேட்கின்றனர்

ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முன்பே 'திராவிட நாடு' கிளர்ச்சி இருந்ததை அமைச்சர் அறியவில்லையா?'

சேலத்தில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

20-10-57 மாலை சேலம் போஸ் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் நிகழ்த்திய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது; முற்பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது :—

"நம் கருத்துக்களை சர்க்காரும், உலக மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினோம். அந்தக் காரியத்தை சட்டசபையிலும், டெல்லிப் பாராளுமன்றத்திலும் நாம் செய்கிறோம். அதனால் நாம் போராட்டத்தை மறந்து விடவில்லை; விட்டுவிடவும் இல்லை. போராட்ட முறைகளில் இன்னும் நம்பிக்கை வைத்துத்தான் இருக்கிறோம்.

"இப்பொழுது புகுத்தப்படும் இந்தியை நாம் எதிர்த்து விரட்டாவிட்டால், வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தின் பிடிப்பிலிருந்துவிடுபட பல நூற்றாண்டுகளாகும். இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறாவிட்டால் நமக்குப் பெரும் தோல்வியாகும். நாம் பேசும் போது, அவர்கள் பேசிக் கொண்டே இருக்கட்டும். மெஜாரிடியின் காரணமாக இந்தியைக் கொண்டுவரலாம் என நேருவும், கோவிந்த வல்லபபந்தும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நாம் நடத்தப்போகும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெறும் கண்ணாமூச்சி விளையாட்டுப்போல் இருக்காது.

"தமிழ் நாட்டு மக்களைச் சந்தித்து இந்தியைக் கொண்டுவருவது பற்றி வடநாட்டுத் தலைவர்கள் சொல்லவேண்டும். மக்களைக் கேட்டுச் செய்யும் வழக்கம் தான் காங்கிரஸ்காரர்களிடத்தில் இல்லையே! இந்தியை ஏன் இன்னும் கட்டாயப்பாடமாக்கவில்லை என்று மத்தியப் போராசு சென்னை சர்க்காருக்குத் தாக்கீது அனுப்பியுள்ளதாம்.

"இந்தி பற்றி, இராசேந்திர பிரசாத்தின் பேச்சுக்கும், பண்டித நேருவின் பேச்சுக்கும் முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே! இவர்களிருவரில் யார் பேசுவதை நாம் நம்புவது? இராசேந்திர பிரசாத், நேரு இவர்கள் இந்தி பற்றி முன்னுக்குப்பின் முரணாக பேசியதைக் குறித்து டெல்லி பாராளுமன்றத்தில் நான் பேசி, அதற்கு விளக்கம்—அதாவது இராசேந்திரபிரசாத் பேச்சை நம்புவதா அல்லது நேருவின் பேச்சை நம்புவதா என்று—கேட்டேன். இதுவரையில் யாதொரு விளக்கமும் கூறப்படவில்லை. எங்கோ மைதானங்களில் நடக்கும் பொதுக்கூட்டங்களில் நாம் பேசினால், அவர்கள் விளக்கம் கொடுக்கவேண்டியதில்லை. டெல்லி பாராளுமன்றத்தில் பேசி விளக்கம் கேட்டால், விளக்கம் சொல்லாமல் மவுனமாக இருப்பதேன்?

"சேரன்—செங்குட்டுவன், கட்டபொம்மன் முதலியவர்களின் வீரம் பற்றி தமிழ் நாட்டில் பிரமாதமாக நாம் பேசுகிறோம். அவர்கள் வீரங்களைப் பற்றி சிறப்பாகக் கதைகளில் எழுதியும், நாடகங்களில் நடித்தும் வருகிறோமே தவிர, அவர்களின் வீரம் நமக்கில்லை. நாம் இன்னும் கோழைகளாகவே இருக்கிறோம்; இந்த நிலைகண்டு நான் வெட்கித் தலை குனிகிறேன். செங்குட்டுவன் போன்றவர்களின் வீரத்தை பிரமாதமாகக் கொண்டாடி, நம்மை நாமே ஏற்றிக்கொள்ளுகிறோம்; செங்குட்டுவன்பற்றிப் பேசும்பொழுது அவர்களுடைய வீரம் நமக்கு வரவேண்டும்.

"நடக்கப்போகும் போராட்டத்தில் தமிழர்கள் மட்டும் தனியாக இந்தியை எதிர்க்கப் போவதில்லை. இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற பகுதியிலிருந்தும் நமக்கு ஓரளவு ஆதரவு கிடைக்கும். நம் போராட்டம் பலம்வாய்ந்ததாக இருக்கும்.

"அதிகாரம், பண பலம் இவற்றை வைத்துக்கொண்டு வடநாட்டு ஏகாதிபத்தியம் நம்மை மிரட்டி வேலை வாங்கப் பார்க்கிறது.

"150 ஆண்டு அனுபவத்தால் கற்ற ஆங்கிலத்தை அவர்கள் கைவிட்டால், உலகில் அவர்களால் பிச்சை கேட்க இந்தி உதவாது. காஷ்மீர் பிரச்சினையைப் பேச இந்தி உதவாது. 10 ஆண்டிற்கு முன் இந்தியைப்பற்றி வடநாட்டுத் தலைவர்கள் பேசிய பொழுது, 'வெள்ளையர்களின் எந்தப் பொருளையும்—ஆங்கிலத்தையும், வெள்ளையர்களின் சிலைகளையும் வைத்துக் கொள்ளப் போவதில்லை' என்றார்கள். ஆனால் இப்பொழுது, ஆங்கிலத்தை வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆங்கிலத்தை அவர்களால் விட முடியாது. ஆனால் அதே சமயத்தில் இந்தியைக் கொண்டுவந்து நம்மைப் புறக்கணிக்க—நம்மைச் சுரண்ட, உத்தியோகங்களில் வடநாட்டுக்காரர்களை அமர்த்த திட்டமிட்டுள்ளார்கள். வங்காளத்தைச் சேர்ந்தவர்களும், தென்னாட்டைச் சேர்ந்தவர்களும்தான் ஆங்கிலத்தில் திறமைசாலிகளாக விளங்குகிறார்கள். வடநாட்டுக்காரர்களுக்கு ஆங்கிலத்தில் அவ்வளவு அறிவுத் திறன் இல்லை.

"வடநாட்டு சர்க்கார் தென்னாட்டு மக்களை எப்பொழுதும் புறக்கணித்துத்தான் வருகிறார்கள். சுதந்தர நூற்றாண்டுவிழா சினிமாப் படத்தை எடுத்தார்களே, அதைக் கண்டு தமிழ்நாடு காங்கிரசும், தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களும் வேதனைப்பட்டார்கள். பிறகு அந்தப் படம் வாபஸ் பெறப்பட்டது. தென்னாட்டு மக்களை எவ்வாறு வடநாட்டு ஏகாதிபத்தியம் நடத்துகிறது என்று இதிலிருந்து தெரியவில்லையா?

"இந்தியக் கவிஞர்கள் என்ற பெயரால் தபால் ஸ்டாம்புகளை அச்சடித்தார்களே, அந்த ஸ்டாம்புகளிலும் தென்னாட்டுக் கவிஞர் ஒருவரின் உருவம் கூட அச்சடிக்கப்படவில்லையே. இந்தியக் கவிஞர்கள் அனைவரையும் மதிப்பதாகக் கூறும் இலட்சணம் இதுதானா?

"தனிப்பட்ட முறையில் இந்தி தேவையில்லை எனக் காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள்; ஆனால், அரசியல் வட்டாரத்தில் கூற காங்கிரஸ்காரர்களுக்குத் துணிவு வருவதில்லை. இந்தி வேண்டாம் என்று டெல்லிப் பாராளுமன்றத்தில் தி. மு. க. பேசிய பின்தான் காங்கிரஸ் நண்பர்கள் தைரியமாகக் கூடி, 1965-ல் கொண்டுவர இருக்கும் இந்தியை 1990 வரை தள்ளிப்போடுமாறு மனு எழுதி, அதைப் பண்டித நேருவிடத்தில் கொடுத்தார்கள்.

"கடன்காரன் வாய்தா கேட்பது மாதிரி, ஏன் இந்தக் காங்கிரஸ்காரர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடம் இந்திக்கு வாய்தா கேட்க வேண்டும்? காங்கிரஸ்காரர்கள் நெஞ்சில் கை வைத்து, இந்தி வேண்டுமா வேண்டாமா என்று சொல்ல வேண்டும் என்று இராசகோபாலாச்சாரியார் கூறுகிறார். ஆனால் தங்கள் உட்கருத்துக்கு மாறாக, காங்கிரஸ்காரர்கள் பயந்து வாய்தா கேட்க வேண்டிய அவலநிலை ஏன்? தமிழ்நாடுக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடம் தொடைநடுங்கிகளாக இருக்கிறார்கள். இம்மாதிரி தொடைநடுங்கிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதால் நம் சமுதாயத்தை மாக்கட்டை என்று எண்ணி, எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று வடநாட்டுஏகாதிபத்தியம் எண்ணுகிறது.

"10 ஆண்டுக்குப் பல்லைக் கடித்துக்கொண்டு திராவிட நாட்டுப் பிரச்சினையை ஒத்திப்போடுமாறும், 10 ஆண்டுகள் கழித்ததும் தமிழ்நாட்டில் அபிவிருத்தி வேலை செய்யப்படாவிட்டால் பிறகு வேண்டுமானால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்றும் சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம் நம்மிடம் வாய்தா கேட்கிறார். அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடம் வாய்தா கேட்டுப் பழக்கப்பட்ட மந்திரி சுப்பிரமணியம், எதிர்க்கட்சிக்காரர்களிடத்திலும் வாய்தா கேட்கிறார். வாய்தா கேட்கும் பழக்கம் காங்கிரஸ்காரர்களைவிட்டு அகன்றபாடில்லையே! (கைதட்டல்)

"அமெரிக்காவில் மெடல் வாங்கவும், ஐ. நா. சபையில் திறமையாகப் பேசவும்தான் காங்கிரஸ் தலைவர்கள் விரும்புகிறார்களே தவிர, நாட்டு மக்களின் நன்மையைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கடன் கொடுக்கும்படி டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், நேருவும் பிச்சைப் பாத்திரம் ஏந்தி வெளிநாடுகளுக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பி வருகிறார்களே! போதுமான அளவு பணம் கிடைக்காத காரணத்தால் திட்டத்தில் முக்கியமானவைகளுக்குத்தான் கவனம் செலுத்துவது என்று முடிவு செய்திருப்பதாக மந்திரிகள் கூறுகிறார்கள்.

(3-ம் பக்கம் பார்க்க)

திருச்சி 'காளி மார்க்' நிர்வாகத்தின் போக்கு!

திருச்சி, அக். 28—

திருச்சி காளிமார்க் சோடா தொழிற்சாலையில் 30—9—57-ல் 9 தொழிலாளர்களை நிர்வாகம் 'டிஸ்மிஸ்' செய்தது. அதை எதிர்த்து தொழிலாளர்கள் அனைவரும் வேலைநிறுத்தம் செய்தனர். 'லேபர் ஆபீசர்' சமரசம் செய்து வைத்தார். அந்தச் சமரசத்தை நிர்வாகம் அமுல் நடத்தவில்லை.

இதற்கிடையில் 14-10-57-ம் தேதி நிர்வாகம் 16 தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்கிவிட்டது. அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் மறியல் செய்துவருகிறார்கள். சென்னை உதவிக் கமிஷனர், திருச்சி லேபர் ஆபீசர் ஆகியோர் செய்த சமரசத்தையும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

தொழிலாளர் அனைவரும் தினசரி ஊர்வலமாக ஒவ்வொரு கடைக்கும் சென்று காளிமார்க் சோடா, கலருக்கு ஆதரவு கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

திருச்சியிலுள்ள கடைக்காரர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, "நீக்கப்பட்ட தொழிலாளர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளும்வரை காளிமார்க் சோடா, கலரை வாங்கி வியாபாரம் செய்யமாட்டோம்" என்று (300 கடைக்காரர்கள் கையெழுத்திட்டு) துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு தொழிலாளி தாக்கப்பட்டார்

இதற்கிடையில் தொழிலாளி கருப்பையா என்பவரை 26-10-57 பகல் 2 மணிக்கு சிலர் அடித்துப் போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். தோழர் கருப்பையா அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

புதுவை தி. மு. கழக ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம்

20—10—57 மாலை 6-30 மணிக்கு, செஞ்சிச்சாலைத் திடலில், தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில், புதுவை நகர தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில், கழக ஆண்டுவிழாவும், திராவிட நாடு பிரிவினை வாரமும ஒரே மாதத்தில் வருவதால் இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒன்றாகவே நடத்தி வருவது வழக்கமென்றும், அதற்கும், 13—10—57,ல் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடத்துவதற்கும் இட அனுமதி கிடைக்காத காரணத்தால், இந்த ஆண்டு விழாவோடு திராவிட நாடு விடுதலை நாளும் இந்தி எதிர்ப்பு நாளும் சேர்த்து நடத்துவதாகவும் தெரிவித்தார்.

பின்னர், தோழர்கள் வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி, கி.மனோகரன் ஆகியோர் டில்லி ஏகாதிபத்தியம் தென்னாட்டின்மீது கொண்டிருக்கும் அலட்சிய மனப்பான்மையையும், செய்துவரும் சூழ்ச்சி முறைகளையும், ஓரவஞ்சனைகளையும், இந்தியைக் கட்டாயமாகக் கொண்டுவருவதின் நோக்கங்களையும், இவற்றிற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினர்.

நகர் கிராமத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

14—10—57 மாலை 7 மணிக்கு (லால்குடி வட்டம்) நகர் கிராமத்தில் தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம், தோழர் பி. எஸ். அலாவுதீன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். நெடுமாறன் ஏ. டி. அரசு ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர். கூட்டத்தில் இந்தியை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

'வருங்காலப் போர்களில் அணு ஆயுதம் கூடாது'

செஞ்சிலுவை மாநாட்டில் பொதுவுடைமை நாடுகள் வற்புறுத்தல்

புதுடில்லி, அக். 30—

செஞ்சிலுவைச் சங்கத்தின் மனிதாபிமான சட்ட ஆக்கக் குழு நேற்று இங்கு கூடி, போர்க் காலங்களில் பொதுமக்களுக்கான பாதுகாப்புத் தரும் சட்டங்களின் நகலைக் குறித்து விவாதிக்கையில், கம்யூனிஸ்டு நாடுகளான சோவியத் யூனியன், சீனா, போலந்து, பல்கேரியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, செக்கோஸ்லோவேகியா ஆகியவற்றின் பிரதிநிதிகள், 'இனி எதிர்காலத்தில் நடக்கும் எந்தப் போரிலும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது' என்பதை வற்புறுத்தினக்.

இந்தியை எதிர்க்கும் நம் போராட்டம்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வடநாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள் தான் முக்கியமான திட்டங்கள் என்று வடநாட்டு சர்க்காரால் கருதப்படும். நெய்வேலித் திட்டத்தைக்கூட முக்கியமானது அல்ல என்று கூறி நிறுத்திவிடக் கூடும்.

"உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலிய பகுதிகளில் சென்ற ஆண்டு மழை இல்லாததால் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளன. இந்தப் பிரதேசங்களுக்கு நிதி உதவியளிக்க வேண்டும் என்று அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் மந்திரிகளால் கோரப்படும். அந்தப் பஞ்சப் பிரதேசங்களுக்கு ரூ. 20 கோடி உதவி வேண்டும் என்று கேட்பார்கள். அடுத்த ஆண்டு, அந்தப் பிரதேசங்கள் வெள்ளத்தின் காரமாகப் பாதிக்கப்பட்டதாகக் கூறி வெள்ள நிவாரணத்திற்காக மத்திய சர்க்காரிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வார்கள். பஞ்சம், வெள்ள நிவாரணம் என்று மாறிமாறி வடநாட்டில் செலவு செய்கிறார்கள். இது தவிர, ஐந்தாண்டுத் திட்டத்திலும் அந்தப் பிரதேசங்களுக்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. தென்னாட்டில் பஞ்சம் ஏற்பட்டபொழுது அதற்கு மத்திய சர்க்கார் உதவியளிக்கவில்லையே!

ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதுபவர்களுக்கு வடநாட்டு எம். ஏ. படித்த போராசிரியர் ஒருவர் எழுதியுள்ள புத்தகத்தில், 'தமிழ், இந்தியாவில் உள்ள பல மொழிகளில் ஒன்று; சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்தான் தமிழில் இலக்கியங்கள் தோன்றின; சிறந்த இலக்கியம் கம்ப இராமாயணம்' என்று எழுதியிருக்கிறார். அந்த அளவுக்கு நம் தமிழ்மொழியைப்பற்றி அவர்கள் தெரிந்து இருக்கிறார்கள்.

"நம் தமிழ் மொழி பண்டைக் காலத்திலிருந்தே சிறப்புடன் விளங்குகிறது. 2,000 ஆண்டுகளுக்கு முன் திருக்குறள் எழுதப்பட்டது; 1,500 ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகாரத்தை இளங்கோ எழுதினார்—என்றெல்லாம் நமக்குள்ளே இங்கேயே கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுகிறோமே தவிர, நம் பண்டைக்கால முன்னோர்களைப் பற்றிய வீரத்தைப் பற்றி வடநாட்டுக்குப் பரப்பும் விஷயத்தில் இங்குள்ளவர்கள் கவனம் செலுத்துவதில்லை.

"ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு அதிக ஏற்பாடுகளைச் செய்துவிட்டால் திராவிட நாட்டுப் பிரச்சினையை விட்டுவிடுவீர்களா என்று மத்தியப் பேரரசு அமைச்சர் என்னைக் கேட்டார். நாட்டின் விடுதலையை பேரத்திற்காகவா கேட்கிறோம்? ஐந்தாண்டுத் திட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னாலேயே, திராவிடநாடு கிளர்ச்சி ஏற்பட்டது என்பதை வடநாட்டுத் தலைவர்கள் உணர வேண்டும்.

"இந்தி எதிர்ப்புப் போராட்டம் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படவிருக்கிறது. துப்பாக்கிகளைப் பயன்படுத்தி நம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க எண்ணினால், அதற்காகப் பயந்து நம் போராட்டத்தை விட்டுவிடமாட்டோம். அதற்கேற்றவகையில் போராட்ட முறைகள் மாறுமே தவிர, போராட்டத்தை விடமாட்டோம்.

"வீட்டுக்கொரு ஆளை போராட்டத்திற்கு அனுப்புங்கள்—என்று அண்ணா அவர்கள் அண்மையில் உருக்கத்தோடு பேசினார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சிறந்தமுறையில் நடத்த இந்த நாட்டு மக்களும் தயாராக இருக்கிறார்கள். நல்லமுறையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்."

திருச்சியில் கொள்கை முழக்கம்

திருச்சி டவுன்ஹால் திடலில் 6—10—57 மாலை 6 மணிக்கு 13-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம், தோழர் தா. மா. வானமாமலை தலைமையில் நடைபெற்றது.

இருபதாயிரம் மக்களுக்குமேல் கூட்டத்திற்கு வந்திருந்தனர். திடல் எங்கும் மின்விளக்குகளாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகிய முறையில் அமைக்கப்பட்ட பந்தலும், மேடையும் பலரின் உள்ளத்தைக் கவர்ந்தன.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசிக்கும்போது மக்கள் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

கூட்டத் தலைவர் தோழர் தா. மா. வானமாமலை பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாடெங்கிலும் நம் கழகம் பணியாற்றிவருகிறது. கிளைகள் இல்லாத சிற்றூரோ, பேரூரோ இல்லை என்று கூறலாம். கழகத்தைக் கட்டிக்காத்துவரும் இளைஞர்கள் தொகை இரண்டு இலட்சத்திற்கும் அதிகம். ஆதரவு தந்தும் நல்ஆசி மொழி கூறியும் வரும் தாயக மக்கள் பல இலட்சம். கடந்த எட்டு ஆண்டில் நம் கழக வளர்ச்சியைக் காணச்சகிக்காத சில 'வயிற்றுவலிக்'காரர்கள், கழகம் முளையிலேயே கருகிவிடும் என்றார்கள். முளை செடியானது; செடியை அழிக்க மாடாய், மாட்டிற்குத் துணையாய் வந்து முயன்றார்கள்; செடி, மரம் ஆனதைக்கண்டார்கள்; இன்று இதை வெட்டி வீழ்த்த ஓர் ஒதுக்குகளில் நின்று ஓலமிடுகிறார்கள். 'குளிர் தரு நிழலும், பூவும், பிஞ்சுமாக இருக்கிறதே, ஏன் இதை வெட்டவேண்டும்?' என்று மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

"கடந்த சட்டசபைத் தேர்தலில் நாம் கலந்துகொண்டோம்; 17 இலட்சம் வாக்குகளைப் பெற்றோம். அன்று செடியை மக்கள், அன்பென்னும் நீராலும், ஆதரவு எனும் உரத்தாலும் பாதுகாத்தார்கள்; இன்று மரம், நாம் சென்னை—டெல்லி சபைகளில் பூவும், பிஞ்சுமாகக் காட்சி தருகிறோம்."

அடுத்து, தோழர்கள் கரூர் எம். குழந்தைவேல் எம்.சி., எம். எஸ். மணி, டி. பி. அழகமுத்து, எர். பி. முத்துக்கருப்பன் ஆகியவர்கள் கழக வளர்ச்சி, அது ஆற்றிவரும் தொண்டு, எதிரிகளின் தூற்றல்கள் பற்றியும், தொழிற்சங்கங்களில் நாம் ஆற்றிவரும் தொண்டு பற்றியும், தொழிலாளர்களிடையே பேத உணர்ச்சியை வளர்த்து தங்கள் வாழ்க்கையை நடத்த விரும்பும் தோழர்களைத் திருந்திக்கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டும் பேசிய பிறகு தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி. அவர்கள் சொற்பொழிவாற்ற எழுந்தார்; திருச்சி நகரிலுள்ள கிளைக் கழகங்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் அவருக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர், தோழர் சம்பத் அவர்கள் மலர்மாலை அணிவித்தும், கைத்தறி ஆடை வழங்கியும், வரவேற்பு—வாழ்த்திதழ் நல்கியும் பாராட்டிய தோழர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, கழக வளர்ச்சி, வளர்ச்சியைக் காணச் சகிக்காதவர்கள் செய்த—செய்துவரும் கேடுகள் குறித்துப் பேசிவிட்டு, சென்னை சட்டசபையில் தி. மு. க. வீரர்கள் 15 பேர்தான் என்றாலும் அவர்களின் தூய உள்ளத்தையும், மக்களுக்குத் தொண்டாற்றிவரும் தீரத்தையும், திறமையையும் விளக்கி, பின், 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கக்கூட அஞ்சும் 150 காங்கிரஸ் எம்.எல். ஏ-க்களால் நாட்டிற்கு என்ன நன்மையைச் செய்திட முடியும் என்று வினவினார்.

அடுத்து, டெல்லி பாராளுமன்றத்தில் தி. மு. க. சார்பில் சென்றுள்ளவர்கள் இருவர்தான் என்றாலும், உறுதியுடனும் தெளிவுடனும் தென்னக மக்களின் உள்ளக் குமுறலைத் தெரிவித்து வருகிறார்கள் என்பதுடன், தமிழ்நாட்டு எம்.பி.-க்கள் 'இந்தி இப்பொழுது வேண்டாம்; 1990-ல் வைத்துக்கொள்ளலாம்' என்று, நேருபிரானிடம் விண்ணப்பம் போடும் அளவுக்காவது தைரியத்தை ஊட்டியிருக்கிறது என்றும், இந்தியைப் பரப்பப் பண்டித பந்த் அவர்கள், பதுங்கிப் பாயும் புலியின் நிலையில் இருக்கிறார்கள் என்றும், நாம் என்ன விலைகொடுத்தாவது அதைத் தடுத்துத் தீர வேண்டுமென்றும், இப்பொழுது பேசாதிருந்துவிட்டால் என்றைக்கும் மீளா அடிமை நிலைக்கு நாம் ஆளாகிவிடுவோம் என்றும் கூறி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திண்டிவனத்தில் இலட்சியக் குரல்!

21—10—57 மாலை 7 மணியளவில் திண்டிவனம் காந்தி திடலில் தோழர் வே. ஆறுமுகம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில், 'திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கிள்ளி எறிவதற்கு அது முளைவிடும் பருவத்தில் இல்லை; 8 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன; இதை அழிக்க எவராலும் முடியாது' என்று குறிப்பிட்டார்.

அடுத்து நகர மன்ற உறுப்பினர் எஸ். நடராசன் பேசுகையில், 'தேர்தல் காலத்தில் காங்கிரசார், நீதியையும் நேர்மையையும் மறந்து கண்ணியத்தைத் துறந்து, முதலாளிகளிடமிருந்தும் பணக்காரர்களிடமிருந்தும் ஏராளமான பணம் பெற்று வெற்றிபெற்றனர்; ஆனால் தி. மு. கழகம் அவ்வாறில்லாது, மக்களையே நம்பி தேர்தலில் குதித்தது; 17 இலட்சம் மக்கள் வாக்குகள் அளித்தனர்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் எஸ். பக்கிரிசாமி பேசுகையில், மற்ற எல்லாக் கட்சித் தோழர்களும் வசைமொழி பாடினாலும், நாங்கள் அவ்வாறு பேசவும் ஏசவும் மாட்டோம். மாற்றுக் கட்சித் தோழர்களின் வசைகளை தி. மு. கழகம் எருவாகக்கொண்டுவளருகின்றது' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, மாணவர் கழகத் தோழர் கோதில்மொழியன் பேசுகையில், 'தனியரசு தேவை என்போரின் ஊடே எழும் இன உணர்ச்சி, 'ஓர் இனத்திற்கு மற்றோர் இனம் அடிமையில்லை' என்போரின் உள்ளத்தில் தோன்றும் உரிமைக் கிளர்ச்சி—இதை எங்கும், எவராலும், எப்போதும் அழிக்கமுடியாது; இது உறுதி; ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆண்டிட எந்த மக்களும் ஒப்பார்; ஒவ்வார் என்று உலக சரித்திரம் தன் ஒவ்வொரு அத்தியாயத்திலும் கூறுகின்றது. எனவே, வடநாடும இத்திருநாட்டை அதிக நாள் ஆண்டிட முடியாது' என்றார்.

அடுத்துப் பேசிய தோழர் ப. இராமானுசம், 'பிரெஞ்சு நாட்டில் தோன்றிய பெரியதொரு புரட்சியைப் போன்று இங்கும் உண்டாக்க வழிகோலுகின்றார்கள் வடநாட்டார்; பலாத்காரமில்லாது திராவிடத்தைப் பெறுவோம்; இதுவே எங்கள் கொள்கை' என்றார்.

அடுத்து, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மக்கள் கையொலிக்கிடையே பேச எழுந்தார்; திண்டிவனம் தி. மு. க. மாணவர் கிளைச் சார்பில் மலர் மாலையும், வரவேற்பிதழும்; அல்லமுத்தூர் தி. மு. கழகத்தினரால் கைத்தறித் துண்டும்; திண்டிவனம் மலர் விற்பனையினரால் மாலையும்; திண்டிவனம் தி. மு. கழகத்தினரால் கைத்தறித் துண்டும் அளிக்கப்பட்டன.

பின்னர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வடநாட்டார் தென்னவருக்கு இழைத்துவரும் அநீதி கொஞ்சநஞ்சமல்ல; ஐந்தாண்டுத் திட்டத்திலே அநீதி! ஸ்டாம்பு வெளியிடுவதிலே அநீதி! படம் எடுப்பதிலே அநீதி! இதற்கொரு முடிவு வேண்டாமா?

"'அகில இந்தியா' என்று இன்னும் ஏமாற்ற முடியாது; ஏனென்றால், மக்கள் விழித்துக் கொண்டார்கள் — நாக நாடு வேண்டும்; தனி குசராத் வேண்டும்; மராட்டியம் வேண்டும்—இப்படி இந்தியாவின் பல பாகங்களில் குரல் எழும்புகிறது.

"தண்ணீரும் பன்னீரும் ஒன்றாக முடியும்; ஆனால், சாக்கடைநீரும் சந்தன மணமும் ஒன்று சேருமா? அதுபோல் வடக்கும்—தெற்கும் ஒன்று சேர்ந்திட முடியாது.

"வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிக்கும் கடைசி சாவு மணிதான் இந்திப் பிரச்சினை. இதில் எல்லோரும் சேர்ந்திட வாரீர்! வந்திருக்கும் இந்திப் பேயை ஓட்டிட வாரீர்!

"தொன்மையான இலக்கியம் கொண்ட நம்மை வடநாட்டவர் 400 ஆண்டுகளுக்கு முன்தான் இலக்கியம் பெற்றோம் என எழுதுவதைக்கண்டு நாம் வெட்கமடைய வேண்டாமா?

"பொம்மைகளை ஆட்டிப் படைக்கும் ஆட்டக்காரனைப்போல் தென்னகத்தை வடநாடு ஆட்டிப் படைக்கின்றது. அங்கிருப்பவர்கள் நம்மவரை கால்தூசிக்குக்கூட மதிப்பதில்லை"

மற்றும், சம்பத் அவர்கள், வடநாட்டாரின், சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி, சட்டமன்றத்திலே தி. மு. கழகத்தின் பணிகளைப்பற்றியும், மாற்றுக் கட்சிகளின்—குறிப்பாகக் காங்கிரசாரின் நிலைமைகளை விளக்கியும் பேசினார்.

கழகக் கூட்டங்கள்

★

கூடுவாஞ்சேரி:
நந்திவரம்போலீஸ்நிலையம்எதிரில்
1—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. எஸ். பூஞ்சோலை
பேசுவோர்:
அண்ணா
மா. கி. தசரதன்

★

தாராபுரம்:
இஸ்லாமியா பேட்டையில்
1—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே.எஸ்.எஸ். பெரியார்
பேசுவோர்:
அறிவுடைநம்பி
எம். ஏ. லத்தீப்
சா. வாணன்
இசை: சு. இராமலிங்கம்

★

திருவெறும்பூர்:
ஊராட்சி மன்றத் திடலில்
2—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. காமாட்சி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அன்பில் தர்மலிங்கம்
எஸ். நெடுமாறன்
மதிவாணன்
கூ. மு. பெரியசாமி

★

தன்னும்பட்டினம்:
(சீர்காழி வட்டம்)
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
2—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சீராளன்
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
சி. ஜம்பு
டி. கே. கோபாலகிருஷ்ணன்
எஸ். சோமசுந்தரம்
இதயந்திரன்

★

புதுப்பேட்டை:
(தெ. ஆ. மாவட்டம்)
2—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ச. சாம்பசிவம்
பேசுவோர்:
என். சீவரத்தினம்
பி. அப்துல்லா

★

வாடிப்பட்டி:
(மதுரை மாவட்டம்)
2—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சு. சவுண்டப்பன்
பேசுவோர்:
வீ. வெ. குருசாமி
பி. பாண்டியன்
ப. குறள்தாசன்
எஸ். எஸ். இராதா
தா. பாண்டியன்
மு. கனகராசன்

மதுரை 31-வது வட்ட நடராசன்படிப்பக உறுப்பினர்கட்கு:

1—11—57 இரவு 10 மணிக்கு மதுரை 31-வது வட்டம் கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பக (தி. மு. க. உட்கிளை) உறுப்பினர் கூட்டம், மேற்படி படிப்பகத்தில் தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

போலந்து கம்யூனிஸ்டுக் கட்சியில் களையெடுப்பு!

வார்சா, அக். 29—

கோமுல்காவைத் தலைவராகக் கொண்ட போலந்து கம்யூனிஸ்டுக் கட்சி, விரும்பத்தகாதவர்களெனக் கருதப்படும் நபர்களைக் கட்சியிலிருந்து ஒழித்துக்கட்டுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், கம்யூனிஸ்டுக் கட்சிக் கொள்கையைத் திருத்த வேண்டுமெனக்கோருவோர், கொள்கையை வெறியுடன் வற்புறுத்துவோர், ஆமை வேகத்தில் செல்லுவோர், வாயாடிகள், மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லுகிறவர்கள் இவர்களுக்கெல்லாம் கட்சியிலிருந்து 'கல்தா' கொடுக்க வேண்டுமென உத்தரவு கூறுவதாகவும் தெரிகிறது.

மாவட்ட மன்றப் பொறுப்புகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவது ஏன்?

மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பை மசோதா குறைக்கும்!

காங்கிரசின் சூழ்ச்சி விளக்கப்படுகிறது!

சென்னை, அக். 29—

மாவட்ட மன்றம் பற்றி சென்னை மேல் சபையில் நடந்த விவாதத்தின்போது, டாக்டர் ஏ. சீனிவாசன் அவர்கள் மாவட்ட மன்றங்கள் தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தார்.

அவர் பேசியதாவது:—

"காங்கிரசு அரசாங்கத்தின் இத்தகைய முயற்சி ஒரு அரசியல் சூழ்ச்சியாகும். இதேநிலை ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதும் எற்பட்டிருக்கிறது. அப்போது இத்தகைய அதிகார மாற்றத்தை இன்று ஆட்சியிலிருக்கிற இதே காங்கிரசுக் கட்சி வன்மையாகக் கண்டித்தது. ஸ்தல ஸ்தாபனங்களிலே மக்கள் அனுபவம் பெற்றால், பொதுவாழ்க்கைத் துறையில் அவர்களுக்கு ஈடுபாடு ஏற்படும். அத்தகைய ஈடுபாட்டைத் தடுப்பதின் மூலம், காங்கிரசுக் கட்சி என்றும் ஆட்சியில் இருப்பதற்கு பலமான அரண் அமைத்துக் கொள்ளுகிறது என்று நான் கருதுகிறேன்"

மசோதாவை எதிர்த்து, திரு. வி. கே. ஜான் அவர்களும் பேசினர். அவர் குறிப்பிட்டதாவது:-

"இந்த மசோதா, ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் மக்களுக்கும்— ஆட்சிக்கும் இருக்கின்ற தொடர்பைக் குறைக்கவே முயலுகிறது. மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களிடமிருந்து அதிகாரங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளுகின்ற 'பாணி'யிலேயே இது அமைந்திருக்கிறது. மசோதாவின் உள்நோக்கம் தேர்தலை ஒத்திவைப்பதல்ல—தனி அதிகாரிகளை நியமிப்பதுதான்! அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட மன்ற உறுப்பினர்களின் அதிகாரம் குறைக்கப்படுகிறது — அவ்வளவுதான்!

"அரசாங்கம இந்த முறையைக் கையாளுவதற்குப் பதிலாக ஊராட்சி மன்றங்களிடமும், ஊராட்சி மன்ற யூனியன்களிடமும் மாவட்ட மன்றப் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் ஒப்படைத்தால் அதிலே அர்த்தமிருக்கிறது.

"ஆனால் அத்தகைய முறை அமுலுக்கு வருவதற்குஆண்டுகள் பல ஆகும். அடுத்த ஆண்டும், இதே அதிகாரிகளுக்கு அதிகாரம் நீடிக்க வைக்கக்கோரி இதே அமைச்சர்கள் சட்டம் கொண்டு வருவார்கள்"

சட்டமன்றத்தில் அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் அங்கே போலீசுப் படை அனுப்பாமல் நிலையை வளரவிட்டது ஏன்?

"நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அத்தகைய குற்றச்சாட்டுகளை இங்கே மேலும் மேலும் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமுமில்லை—பயனுமில்லை! நாடார்கள் அவைகளை நாடார்கள் என்று எனக்குத் தெரியும்.

"துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படுவதை நாங்கள் கண்டித்தால், அமைச்சர் பக்தவத்சலம் சேட்கிறார்—'நாங்கள் இங்கு மட்டுமா துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம்? இதற்கு முன்னாலே தூத்துக்குடியிலே செய்தோம்—டால்மியாபுரத்திலே செய்தோம்—முதுகுளத்தூரில் செய்ததற்காக நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறீர்களே' என்று!

"ஆம்! இன்னும் எத்தனைத் தடவை உங்கள் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலே துப்பாக்கியைப் பயன்படுத்தப் போகிறீர்களோ—யார்யார்பலியாகஇருக்கிறார்களோ — என்று நான் எண்ணி வேதனைப்படுகிறேன்; அதனால் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என்கிறேன்.

"நீங்கள் இந்தப் பத்தாண்டுக் காலத்தில், துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்கிற அளவுக்கு எந்த ஜனநாயக நாடாவது பயன்படுத்தியிருக்கிறதா என்று—எனக்கல்ல— உங்கள் மனச்சாட்சிக்குச் சொல்லுங்கள்; நீங்கள் வணங்குகின்ற ஆண்டவன் பெயராலும், கடைப்பிடிப்பதாகச் சொல்லி வருகிற காந்திய நெறியின் பெயராலும் உங்களை நான் கேட்கிறேன் — நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள் என்று! மத்திய அமைச்சர், 'கொல்வதற்காகத்தான் இதுவரை சுடச் சொன்னோம்; இனி அப்படிச் செய்யப் போவதில்லை' என்று சொல்லியிருந்தும், 'கொல்வதற்காகச் சுடு' என்றுதானே அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது!

"அண்மையிலே பத்திரிகையிலே பார்த்தேன்—துருக்கியில் ஒரு கட்சி ஆட்சிக்குவந்ததால் அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்குமிடையே தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர்கொண்ட மக்கள் தொகை கூடிவிட்டதாம்; அந்தக் கூட்டத்தைக் கலைக்க அந்த நாட்டு அரசாங்கம் துப்பாக்கியைப் பயன்படுத்தவில்லை—தீயணைப்புப் படையினரின் உதவியைக் கொண்டு மக்களின்மீது தண்ணீரைப் பிரயோகித்திருக்கிறது!

"அண்மையிலே தீயணைப்பு வாரம் கொண்டாடிய நமது அரசாங்கம் ஏன் அந்த முறையைப் பின்பற்றியிருக்கக் கூடாது?

"சுடுவதற்கென்று அனுப்பப்பட்ட அதிகாரியும், சுடுவதிலே பழக்கப்படாதவரல்ல; அதில் கைதேர்ந்தவர்! ஆனால் சுடுவது மிருகங்களையோ, பறவைகளையோ அல்ல —மக்களை என்பதை அதிகாரிகளும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நானூக யூகிக்கிறேன்—'ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டதன் மூலம் இமானுவல் கொலையில் அடங்கியுள்ள மர்மங்களையும், அதைக் கண்டு பிடிப்பதற்கான ஆதாரங்களையும் இழந்துவிட்டோம்'—என்று!

"பாகிஸ்தானில் லியாகத் அலிகான் சுட்டுக்கொல்லப்பட்டதும், சுட்டவர்களைத் திருப்பி அந்த அரசாங்கம் சுட்டதன்மூலம் லியாகத் அலிகான் கொலைக்கான காரணங்களையும், அதற்கு யாரார் உடைந்தை என்பதையும் கண்டு பிடிக்கமுடியாமல் போய்விட்டது. அதேபோல் இங்கும் நமது ஆதாரங்களைப் பாழடித்துவிட்டார்கள் என்று நான் கருதவேண்டியிருக்கிறது. சுடப்பட்டவர்கள் தான் இமானுவல் கொலைக்குக் காரணகர்த்தாக்கள் என்று நான் சொல்லவில்லை—அவர்களிடம் ஆதாரம் கிடைத்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

"சந்தையிலே சுட்டார்களா வண்டி நிலையத்திலே சுட்டார்களா—இரயிலிலே சுட்டார்களா ஒட்டலிலே சுட்டார்களா— என்ற பிரச்சினை ஒருபுறம் இருந்தாலும், மக்களது உள்ளத்தில் இருப்பதெல்லாம், அரசாங்கம், நியாய விசாரணையைச் சரியான முறையில்—சரியான சமயத்தில் பயன்படுத்தவில்லை என்பது தான்.

"தாழ்த்தப்பட்ட மக்களது மனதிலிருந்தும், மறவர்களது மனதிலிருந்தும்இத்தனைப்பேரது படுகொலைக்கு அரசாங்கம் உடந்தையாயிருந்ததை எளிதில் அகற்ற முடியாது.

"ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல—ஆங்கிலேயரின் ஆட்சியில்கூட கலவரங்கள் தீர்ந்த பிறகுதான் நீதி விசாரணை நடத்தப்பட்டுவந்தது. ஆனால், நீங்கள் கலகம் நடந்துகொண்டிருக்கும் போது விசாரணை நடத்தத் துவங்கியதால் நிலைமை மேலும் மோசமாயிற்று என்று குற்றம் சாட்டுகிறேன்.

"இங்கே இருக்கிற பெண் உறுப்பினர் ஒருவர், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் ஒருத்திக்கும் மறவர் வகுப்பைச் சேர்ந்த வாலிபன் ஒருவனுக்கும் நடத்தப்பட இருந்த திருமணத்திற்கு எவ்வளவு எதிர்ப்பு இருந்தது என்று குறிப்பிட்டார்கள்; நாங்கள் சொல்லுகின்ற கலப்பு மணம்தான் இந்த நோய்க்கு மாமருந்து என்று நாங்கள் மனதார நம்புகிறோம்.

"அமைச்சர்கள் எதிர்க்கட்சிகளைக் குற்றம் சாட்டினார்கள்— 'இவர்களெல்லாம் முதுகுளத்தூர் பகுதிக்குப் போய் ஒட்டு சேகரிக்க முயற்சி செய்தார்கள்' —என்று! ஆனால், இது ஒட்டு பெறும் காலமல்லவே!

"இராமநாதபுரத்திலே புயலடித்தபோது காமராசர் அங்கே போனார்; அதை வேண்டுமானால் ஒட்டு சேகரிக்கப் போனதாகக் கொள்ளலாம். இப்போது போனால் உதைதானே கிடைக்கும்? ஓட்டா கிடைக்கும்?

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஏன் அங்கே போகவில்லை என்றுகூடக் கேட்கப்பட்டது; ஆனால், நாங்கள் எப்படிப் போவது? போவதற்கு போலீசுப் பாதுகாப்பு கேட்டால் 'கலவரம் நிற்கட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்றல்லவா சொல்லுகிறீர்கள்?

"இராமாயணத்திலே, சீதையை இராமன் சந்தேகித்ததால், அவள் தீக்குளித்து, தான் நிரபராதி என்று நிரூபித்தாள்—என்று படிக்கிறீர்கள். அதை மனதிலே வைத்துக் கொண்டு—உங்களை நாங்கள் சந்தேகப்படுகிற காரணத்தால்—நீங்களும் நீதி விசாரணை என்னும் தீயிலே குளித்து, உங்கள் குற்றமற்ற —தன்மையை நிருபித்துக் காட்டுங்கள் என்று வேண்டுகிறேன்.

"இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மாறுபட்ட கொள்கையையுடைய நாங்கள், அவரவர்களது கோணங்களிலேயிருந்து அணுகி ஆதரிக்கிறோம் என்பதை மறுபடியும் உங்கள் நினைவிற்குக் கொண்டுவருகிறேன். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், பொதுவான அரசியல் தத்துவத்தின் அடிப்படையில்— பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கிற ஆட்களை மறந்து—பிரச்சினையை அணுகி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறது என்று இந்த மன்றத்திலே கூறிக் கொள்ளுகின்றேன்."

மவுண்ட்ரோடு சட்ட சபை மண்டபம்

கலை அரங்கம் ஆகும்?

சென்னை, அக். 31—

நம் கழக உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, மராமத்து இலாகா அமைச்சர் கக்கன் பதிலளிக்கையில், மவுண்ட்ரோடு சர்க்கார் எஸ்டேட்டிலுள்ள சட்ட சபை மண்டபத்தை மத்திய அரசாங்க விளம்பர இலாகாவுக்காக வாடகைக்கு விடும் யோசனை கைவிடப்பட்டுவிட்டது என்றும், கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், வெளியேயுள்ள மாநில சர்க்கார் அலுவலகங்கள் சிலவற்றை அதில் வைத்துக்கொள்ளவும் உத்தேசிக்கப் பட்டிருப்பதாகவும் கூறினர்.

"அடுத்த தேர்தலில் இந்த சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமாகையால் அக்கட்டடத்தை யாருக்கும் 'தத்தம்' செய்துவிடாமல் சர்க்கார்பாதுகாக்குமா?"

என்று தோழர் க. அன்பழகன் கேட்டதற்கு, 'நிச்சயமாகப் பாதுகாக்கப்படும்' என்றார் அமைச்சர்.

ஆசிரியருக்குக் கடிதம்:

சர்க்கார் கவனிக்குமா ...?

நான் செங்கற்பட்டு, மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தைச் சேர்ந்த நெ. 330 காவனூர் புதுச்சேரி அரிசனச் சேரியில் வசிப்பவன். அங்கு சாதி இந்துக்களுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் நீண்ட நாட்களாக தீண்டாமை இருந்து வருகிறது. சென்ற ஆகஸ்டு 14-ந்தேதி மாரியம்மன் உற்சவம் நடந்தது. ஆண்டுதோறும் 'குடம்' சேரிக்கு வந்து போவது வழக்கம். இந்த ஆண்டும் 'குடம்' வரும் போது சாதி இந்துக்கள், அதைச் சேரிக்குப் போகாமல் தடுத்தார்கள்; அதன் காரணமாக அரிசனங்கள் போலீசுக்கு 'ரிப்போர்ட்' செய்தார்கள். அவர்கள் வந்து 'குடத்தை' சேரிக்குப் போகும்படி அனுமதித்தார்கள். அதன் காரணமாக இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் பகை ஏற்பட்டு, அரிசனங்கள் கிராமத்தில் செய்து வந்த தொழில் முறை (கம்பு குட்டி) வேலை, மற்ற யாவற்றையும் கொடுக்காமல் நிறுத்தி விட்டார்கள். தவிர, அரிசனங்கள் ஊரில் 'வேஷ்டி' கட்டிக் கொண்டு, மிதியடி போட்டுக் கொண்டு போனால் அவர்களை நிறுத்தித் துன்புறுத்துகிறார்கள். குடிதண்ணீரையும் தொடக்கூடாதுஎன்றுசொல்லுகிறார்கள்.

இதைக் காருண்யமுள்ள சர்க்கார் கவனிக்குமா......?

ரா. பனிமுசாமி
காவனூர் புதுச்சேரி கிராமம்

திருப்பூர் நகர தி. மு. க. செயற்குழுவினர்க்கு:

2—11—57 இரவு 8-மணிக்கு நகர வழிப்போக்கர் விடுதியில் நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

2—11—57 மாலை 7-மணியளவில், சென்னை—புதுவண்ணை வள்ளுவர் இளைஞர் மன்றத்தில் தோழர் வி. கோதண்டன் தலைமையில் 'திராவிடமும் ஆரியமும்' என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ